1979 பிப்ரவரி 26]

அரசினர் மகளிர் கலைக் கல்லூரி. தஞ்சாவூர். அரசினர் மகளிர் கலைக் கல்லூரி. கும்பகோணம். எம், சி, முத்தையாபிள்ளை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி. திண்டுக்கல் ஆகிய கல்லூரி களில் பகுதிநேர மருத்துவர்கள் உள்ளனர், அவர்களுக்கு மாதம் ரூ. 100 ஊதியம் வழங்கப் பெறுகிறது,

வெலிங்டன் சீமாட்டி பயிற்சிக் கல்லூரி. சென்னையில் முழு நேர மருத்துவர் உள்ளார். அவருக்கு மருத்துவ மனையில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு உண்டான ஊதியம் வழங்கப் பெறுகிறது.

சென்னை காயிதே மில்லத் அரசினர் கலைக் கல்லூரியில் பகுதி நேர மருத்துவர் உள்ளார். அவருக்கு மாதம் ரூ, 150 ஊதியம் அளிக்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார். அரசினர் கல்லூரி களிலே உள்ள மாணவிகளுக்கு மருத்துவ வசதிகள் அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பது போலவே தனியார் துறை கல்லூரி களிலே உள்ள மாணவிகளுக்கு மருத்துவ வசதிகள் செய்வதற்கு அரசு தரப்பிலே ஏதாவது உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதுபற்றி விவரம் என்னிடத்தில் இல்லை, தனியாக கேள்வி கேட்டால் பதிலைச் சேகரித்துத் தரப்படும்.

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பு.

*வினா எண் 183— திரு. எஸ். கணேசன் :

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்பைத் தேடிச் செல்ல விரும்பும் இளைஞர்களுக்கு உதவ தமிழக அரசு ஒரு குழுவை அமைக்க உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) வெளிநாடுகளில். அதிலும் குறிப்பாக மேற்கு ஆசிய நாடுகளிலே புதியதாக ஏற்பட்டு வரும் வேலை வாய்ப்புகளை தமிழ்நாட்டில் உள்ளவர்கள் முறையாக பயன்படுத்தி பலனடை

வதற்கு வழி செய்யும் வகையில், கடல் கடந்த நாடுகளில் மனித சக்தியை பயன்படுத்தும் கழகம் (Oversees Manpower Corporation Limited) என்ற நிறுவனத்தை ரூ. 50 இலட்சம் மூலதனத்துடன் அரசு அமைத்துள்ளது,'

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மேற்கு ஆசிய நாடுகளிலே படித்த நம் இளைஞர்களுக்கு வேலை தேடித் தருவ தாகச் சொல்லி அவர்களிடம் தனியார் சிலர் ஆயிரக்கணக்கில் பணத்தைப் பெற்றுக் கொண்டு ஏமாற்றி வருவது அரசுக்குத் தெரியுமா ? அப்படி என்றால் அதைத் தடுப்பதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே அப்படி முறைகேடுகள் நடப்பதை தவிர்ப்பதற்காகத் தான் அரசு இந்த கழகத்தை நிறுவியுள்ளது. அது இதன் மூலம் முறையான நிலையில் தகுதியுள்ள இளைஞர்களுக்கு வேலை தேடித் தரமுடியும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிறுவனம் இதற்காக நிறுவப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அந்த நிறுவனம் செயல்பட ஆரம்பித்து விட்டதா ? எப்படி இந்த நிறுவனத்தின் மூலம் வேலைத் தேடித் தரப்படுகிறது ? அதற்கென்று கடைபிடிக்கப்படும் கொள்கை என்ன என்பதை எல்லாம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் கழகம் இதன் முதல் வேலையாக கடல் கடந்த நாடுகளில் பணிபுரிய விரும்பும் தகுதியுள்ள நபர்களையும் அங்குள்ள வேலையளிப்பவர் களுக்குத் தேவையான பலதரப்பட்ட தகுதிகளும் திறமைகளும் உள்ள நபர்களையும் தேர்ந்தெடுக்கும் பொருட்டு ஒரு புள்ளி விவர வங்கியைத் துவக்கியுள்ளது, மேலும் இது அங்குள்ள வேலை கிடைக்கும் வாய்ப்பினை ஆராய மேலே நாடுகளிலுள்ள நமது தூதுவர்களுடனும், வேலையளிப்பவர்களுடனும் வேலை யளிப்பவர்களின் தரகர்களுடனும் தொடர்பு கொள்ள ஆரம்பித்து உள்ளது. அந்த நாடுகளில் தொழில் தொடர்பை ஏற்படுத்தி. அங்குள்ள கட்டுமானப் பணிகளில் இங்குள்ள மக்கள் சக்தியைப் பயன்படுத்தவும் இக்கழகத்தின் நோக்கமாக இருக்கிறது, மேற் கூறிய பணிகளின் பூர்வாங்க வேலைகளை விரைவில் முடிக்க, இந்தக் கழகத்தின் அலுவலர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்,

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அரசாங்கம் 50 இலட்சம் ரூபாய் மூலதனத்தில் இப்படி ஒரு கழகத்தை அமைத்தது மிகவும் நல்ல காரியம். ஆனால் இந்தக் கார்ப்பொ

1979 பிப்ரவரி 26]

ரேஷன் மூலம் இங்கிருந்து வேலை வாய்ப்புக்காக விண்ணப்பம் செய்பவர்களிடம் இருந்து ஏதாவது கட்டணம் வசூலிக்கப்படுவது என்ற ஏற்பாடு இருக்கிறதா? அதே போல் அவர்கள் அங்கே போய் சேர்ந்தவுடன் அவர்களை அங்கே வரவேற்பதற்கும் வேலை கொடுப்பதற்கும் ஏதாவது ஸ்தாபனங்கள் அல்லது அந்த அரசின் மூலம், அல்லது இந்த அரசின் மூலம் ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை எல்லாம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்பொழுது பூர்வாங்க வேலைகளைத்தான் இந்தக் கழகம் துவக்கி உள்ளது. அங்குள்ள அரசுக்குச் சொந்தமான, அல்லது அரசுத் துறையல்லாத வேலைத் தரக்கூடிய நிறுவனங்களுடன் இக்கழகம் நேரிடையாகத் தொடர்புகொண்டு பெறுவதற்கான கட்டுமான பணிகளை எடுத்துக்கொண்டு நமது தொழிலாளர்களுக்கு வேலைகள் பெற்றுத் தரக்கூடிய பணிகள் முறையாக இந்தக் கழகம் துவக்கியுள்ளது.

திருத்தணி பேரூராட்சி.

*வினா எண். 184—திரு. ஆர். சண்முகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்தணி பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

உள்ளாட்சி மன்றங்களுக்குச் சாலை மான்யம்.

*வினா எண். 185—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகர மன்றங்களுக்கும், பேரூராட்சி மன்றங்களுக்கும் தார் சாலை அமைக்க அரசு மான்யம் ஏதேனும் கொடுக்கிறதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆம்.